1092

சற்குரு] சுயம்பிரகாசத் துணை. [சகாயம்.

உலகப்பிரசித்திபெற்ற வேதாந்த பாஸ்கரன் ஆசிரியராகிய

ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

இரண்டாவது

# திருப்பாவணி.

மூன்றாம்பதிப்பு.

இஃது

சண்முகானந்த சுவாமிகள் முயற்சியால்

திருவாரூர்—விஜயபுரம்

கருநிஞுதி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

...ரைட்] 1924. [விலை அணா 2

Q26:41
N24
179823

சற்குரு] சுயம்பிரகாசத் துணை. [சகாயம்.

புலவர்கள் நாயகம் பூங்கழல் சரணம்.

புலிவலம் ஸ்ரீ தெண்டாயுதபாணிக்கடவுள்மீது
ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய
(இரண்டாவது)

# திருப்பாவணி

விநாயகர் காப்பு.

ஆகக் கோயிலில் அமரோங் கார
ஏகப் பொருளை இறைஞ்சுவம் யாமே.

நூற்பயன்.

திருப்பாவணி யென்ற செழுந்தமிழ் நூல்
அருட்பாகம தாக வமைந்துள தால்
விருப்பாகத் துதித்தவர் வெவ்வினை சேர்
கருப்பாசமித் துன்பமும் காணு வரோ.

நூற்சிறப்புப்பாயிரம்.

தானந்தவ மாதிய சற்றுமிலா
வீனந்தரு வார்தமி ழேதுபயன்
ஞானந்திகழ் நாவலநற் கருணை
யானந்த தமிழ்க்கலி யாரமுதே.

வெள்ளிமலை யோத்தபல மேடை என்றவண்ணம்.

நெ. 1. இராகம் சிந்துபைரவி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

சுந்தர விநாயக கணேசா என்முன்
வந்தருள் புலிவலவூர் வாசா பரஞ்
சோதிவடி வாகவந்த நாதனேஎன் மீதுவந்த
தூரயா நால் வாயா

மந்திர விசுவ சொரூபா உன்றன்
தொந்திநிறை யும்படிபால் கோவா நல்ல
வாசமிகு தோசைவடை போளியெல்லாம் நான்றருவேன்
வாவா வுயர் தேவா

தங்கமணி கிண்கிணிக ளாட என்றன்
சஞ்சலம் பவங்களஞ்சி யோட முன்னம்
தத்திமி திமியெனவே நிர்த்தனம் புரிந்தகுண
சாலி பரி பாலி

கங்கைமக னேதவ விநோதா தவக்
கருணையாலந்த குருநாதா நாளுங்
காதலுட னேதுதிக்கும் மாதவர்க் குதவுங்கற்ப
காவே எங்கள் கோவே.

## கலைமகள் துதி.

நெ. 2. இராகம் சுருட்டி—தாளம் ஆதி.

### பல்லவி.

வாணி சரணம் சரணம் எனது நாவில்
வாநீ தருணம் தருணம்.

### அநுபல்லவி

மானே தவளமலர்த் தேனே வுனைநினைந்து
நானே மிகத்துதிக்க லானேனிதுசமையம் (வா)

### சரணங்கள்.

செந்தாமரையில் வளரும் பிரமன்மகிழ்
எந்தாயதிக விளரும்
நந்தாவதனமுள சிந்தாமணியேயின்று
வந்தாதரவருள்செய் கொந்தார்குழலுடைய (வா)

வார்கார் கருணையா னந்தம் குகனைத்தொழு
மாறேநீ செய்பலவந்தம்

சார்கர்மருந்தருந்த மார்கர்தல்கொண்டுநிதம்
யோகர்தனத்தமர்ந்தேன் தா—கா—எனக்குள்வளர் (வா)

## தாயைவிட்டு வந்து காட்டில் என்ற வண்ணம்.

நெ 3. இராகம் பியாக்—தாளம் ரூபகம்.

### பல்லவி.

சண்முகவி லாசம்வளர் சண்முகநாதா செந்
தாமரைப்பாதா—செந் தாமரைப்பாதா—செந்
தாமரைப்பாதா

### சாணுநுபல்லவி.

புண்யனேயான் பண்ணும்பாவம் போக்கிடுவோனே—நின்
பொன்னடிஎன்சென்னிமிசை பொருந்திடத்தானே—தயை
புரிந்தருள்கோனே—தயை புரிந்தருள்கோனே

பஞ்சையானுன் தஞ்சமென்றேன் பன்னிருகையா—உனை
பத்தியுடன் நித்தந்துதி பண்ணுதல்பொய்யா—கண்
பார்முருகையா—கண் பார்முருகையா

எத்தனைநாள் கத்துகின்றேன் இன்னமும்வர்தா—எனக்
கிந்தவேளை சிந்தைமகிழ்ந் திரங்கலாகாதா—தெய்வ
யானைசமேதா—வள்ளி யானைசமேதா

அகிலமங்கள சுகிர்தசம்ப்ரம அலங்கிர்ததேகா—உள்
ஆறுதலங் கடந்துநின்ற அருட்சிவயோகா—நிலை
யருள்செய்விசாகா—நிலை யருள்செய்விசாகா

கண்களூடே நடனமாடுங் கடவுளர்பாலா—நிதங்
கருணையானந் தன்றுதிக்குங் காரணசீலா—செங்
கதிர்வடிவேலா—செங் கதிர்வடிவேலா

## சிக்கல் சிங்காரவடிவேலா என்ற வண்ணம்.

நெ 4. இராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி.

பல்லவி.

தெண்டாயுதபாணி வேலா உன்றன்
சேவடி தந்தான் சுசீலா

அநுபல்லவி.

கொண்டல்நிகர்கையா கோலாகலமெய்யா
விண்டதென்னபொய்யா வேளைவந் தாள்வாய்நீ (தெ)

சரணங்கள்.

வண்டாடும் பூஞ்சோலை சூழும் மணம்
மண்டும் புலிவலம் வாழும்
தொண்டர்களின்நேயா தொண்டைக்கனிவாயா
அண்டர்தொழுந்தூயா ஆதாரம் நீதானே (தெ)

செப்புமொழிகேளா தேனே உயர்
தேவாபிதாநன்மை தானே
சுப்ரமண்யநாமா துன்பப்படலாமா
சிற்பரனேகாமா தேனேயெங் கோனுனை (தெ)

அருணபுளகித பாதா எங்கள்
கருணையானந்த விநோதா
மரணம் வராமுன்னே வழுத்தோருரைமன்னே
தருணம்வராதென்னே சாதா மனுநீதா (தெ)

## சோமசேகரனருளும் என்ற வண்ணம்.

நெ 5. இராகம் சிந்துபைரவி—தாளம் ரூபகம்.

பல்லவி,

கோலநீல சூரமா மயூராவீரா—நித்ய
கோமளகல் யாணனேஎப் யாராதீரா (வனக்)

சரணாநுபல்லவி,

பாலன்றீதிலேகருணை தானிலையா—ஜக
மாலைநீக்கியாள்வதொரு மாமலையா—வீணிற்
காலம்போக்கிடாமேதேக மோர்நிலையா—வடி
வேலனேயுனக்கென்பாங்கர் மாதொலையா(வன)

தெள்ளுதினைமாவுந்தேனுஞ் சேர்த்தேயள்ளி-வாயிற்
கொள்ளுமட்டுமுண்ணுகவென் றாட்டும்வள்ளி-சுரத்
தெள்ளிநாயகாஎனது தீமைதள்ளி—சொந்தப்
பிள்ளைபோலையாதரி குமாராபுள்ளி(வன)

தந்தைபாலனென்பவர்க்குண் டோபிணக்கு-வேத
அந்தபாதைக்காகவே யெனையிணக்கு-எந்தன்
சிந்தையாகுலமெனு மகாகுணக்கு-நீங்க
வந்தருள்செய்பார்க்கொணாது நீணக்கு(வன)

அருள்நெறியுணர்ந்தவர்க் கதிகநேசா-நல்ல
தருணமீதிலேகண்பார் சுயம்ப்ரகாசா-நாளுங்
கருணையானந்தனிதய மீதில்வாசா-மோன
குருமணியேநீயலாற் றுணையேதீசா(வன)

எப்புடு க்ருபாகல்க்குனோ என்ற கீர்த்தனை மெட்டு.

நெ. 6. இராகம் முகாரி—தாளம் ஆதி.

பல்லவி.

என்றைக்குன்பாதங்காண் பேனோ
எழில்வசமுருகா—நான் (என்)

அனுபல்லவி.

இன்றைக்குள்ளபேர்நாளை இருப்பதுசந்தேகமே
என்றுநல்லோர்சொல்லால் ஏங்கினேன்என்தேகமே(என்)

### சரணங்கள்.

உன்னையல்லாதோர்தஞ்சம் உண்டுமோசொல்வாய்நீகொஞ்சம்
உனது தாட்பூங்கஞ்சம் உவந்தருளேதுபஞ்சம்
இன்னமும்ஏனோவஞ்சம் இரங்கிடாதேதுநெஞ்சம்
பொன்மக்கள்மாதர்மஞ்சம் பூமற்றவாழ்வும்நஞ்சம்(என்)

வரமருள்வாய்நீபோதா மரகதமயில்விநோதா
மகனென்றனோடுசூதா மன்னர்புகழ்பிரக்யாதா
கருணையானந்தநீதா கருணைநீசெய்யொண்ணாதா
தருணமென்மீதில்வாதா சாயுச்யகந்தநாதா(என்)

## எந்தவிதந்தனி லுந்துணை தந்தாள என்ற வண்ணம்.

நெ. 7. இராகம் சிந்துபைரவி—தாளம் ஆதி.

### பல்லவி.

புள்ளிமயில்மீது வள்ளியுடனீது
போதில்வந்தாள்வாய் குகா இன்னம்
வாதாகுமோ சண்முகா (புள்)

### சரணுநுபல்லவி.

துள்ளிவிளையாடும் வள்ளால்சுரர்தேடும்
சூரா வொய்யாரா குமாரா வுபகாரா
சோதி வடி வேலனே குற
மாதுமணக்கோலனே (புள்)

எங்கும்பிரகாசா ஏழையென்மேல்நேசா
ஏகா விவேகா விசாகா முன்னால்வாகா
ஏனிந்தச் சோதனையோ எவர்
தான்செய்தபோதனையோ (புள்)

நந்தன்மருகோனே சந்தமுருகோனே
நாதா விநோதா அதீதா மலர்ப்பாதா
நாளுமென்மேற்கோபமோ எந்த
மேலோர்செய்த சாபமோ (புள்)

கஞ்சமலர்க்காலா கௌரிதவப்பாலா
காருங்கண் பாரும்மெய் தாரும்என் முன்வாரும்
கருணையானந்தமெய்யா இது
தருணங்கண்பாருமையா. (புள்)

## எப்படி மனம் துணிந்ததோ சாமி என்றவண்ணம்.

நெ. 8 இராகம் தேசிகதோடி—தாளம் ரூபகம்.

பல்லவி,

சரவணபவ சண்முகானந்தா தமியேனையாளுவாய்
தருணமிதுவே ஞானமாகந்தா.

அநுபல்லவி.

அரவணிபவனீன்ற பாலா அழகியசிங் காரவேலா
கருணையேசெய் வாய்நீ மேலா காணாருமகாசுசிலா (சர)

சரணங்கள்.

எல்லையில்லாத்தொல்லைவா எதுஞாயமோ—கா
தல்மிகுந்தஎன்னுடனே சம்பிரதாயமோ
அல்லும்பகலும் பாமிகவோது அன்பனேடுஎனையாவாது
கல்லுமனம்வேண்டாமினிச்சூது காக்கயனேவஞ்சகமுதவாது சர

தாயில்லாதபிள்ளைபோலே தவிக்கலாகுமா—கண்
தான்பாராவிடில் தீவினைகள் தணந்துபோகுமா
மாயப்ரபஞ்சவாழ்வின்வாசனை வைத்துநான்செய்தேனுபாசனை
சேயைப்போலெனிணைந்தித்தாசனே சேவடிசேராதேன்பல்
[யோசனை

உன்னையன்றியாரிடத்தில் உவந்துசெல்லுவேன்—நான்
என்குறையையெவ்விதமா எடுத்துச்சொல்லுவேன்
இன்னம்வாராமல்சோதனைகொஞ்சம் எணணலாமோநீயினிவஞ்சம்
பொன்னனையபாதசெங்கஞ்சம் போற்றுமெனக்குநாளும்நீதஞ்சம்

ஆகர உகர மகர மூன்றுமொன் — றான ஓங்கார முடிவே
சகாமுதலா றெழுத்துமாய்நின்ற — சண்முகானந்தவடிவே
இகபரந்தனில் நீயன்றிவேறு — ஏதையாளெனக்கு நீகூறு
மகிழ்வுசெய்சொல்லாரவதூறு வானமதற்குச் செய்வாரோசகம்
[மாறு

இருவிழிநீர் பெருகப்புகழ் — இயம்பிடாதவன்-என்
இருளகல வருதும்நீயே — இலங்கும்ஆதவன்
திருவருள்புரி வாய் முருகேசா — தீதிலாத புலிவலவாசா
கருணையானந்தன்உயிர்நேசா — காலமென்றுமகலாவிசுவாசா

## நடந்ததென்ன சொல்லம்மா என்ற வண்ணம்.

நெ. 9. இராகம் நாதநாமக்கிரியை—தாளம் ஆதி.

### பல்லவி.

என்னைக்கை விடலாமா—வர்மம்
ஏன் சுப்ரமண்யநாமா (என்)

### சரணுநுபல்லவி.

அன்னையைப்போலென்னை — யாளுஞ்சகாயா
அருமறைமுடிவைபெற் — கருளுஞ்செவ்வாயா
உன்னையேநினைந்துகொண் — டிருக்கச்செய்யாயா
ஒளிர்பரசிவநேயா — (என்னைக்)

அநித்தியமாகிய — ஜெகப்போகபோக்யம்
அழியும்நீர்க்குமிழிபோ — லிதுவேதவாக்யம்
இனித்தசெம்மலர்நிகர் — நின்பாதபாக்யம்
எனக்கதுவேசிலாக்யம் — (என்னைக்)

கந்தங்கமகமெனக் — கமழ்பசுநீபா
கருணையானந்தன்மீதி — லேயனுதாபா
சுந்தரமானஜக — சோதிசொரூபா
சுடர்மணிவச்சிரதீபா — (என்னைக்)

நெ. 10 இராகம் சாவேரி—தாளம் ஆதி.

பல்லவி,

பிரணவ மணிமந்த்ர முருகனே நீயென்றன்
பிழைபொறுத் தாட்கொள்வ தென்றோ

இருவிழியிடைபவ பிரிதரவளர்தவ
குருபரகுகசிவ குண வண மண ஓம் (பிர)

சரணங்கள்.

கனைகடல்தனில்வீழ்ந்து கதறுகின்றவனைப்போல்
கலங்கிறே னுனக்கிது நன்றோ
உனதுநெஞ்சகங்கல்லோ தினமுநின்னோடுமல்லோ
எனதுசொல்வெறுஞ்சொல்லோ இக பர சுக ஓம்(பிர)

அறுமுகனேயெனக் கொருதுணைநினையன்றி
அவனியின் மீதில்வே றுண்டோ
சிறுவயதில்வெறுப்பாய் செய்ததெல்லாம்பொறுப்பாய்
அறமயலையறுப்பாய் அர கர சிவ ஓம்(பிர)

இருவினைசெல அருள் ஒருவரும்புரிகிலர்
ஏழைநா னென்செய்வே னையோ
கருணையானந்தன்பணி தருமசுப்பிரமணி
மரகதநிறமணி மயில் வெயில் அயில் ஓம்(பிர)

அருட்சோதித்தெய்வம் என்ற வண்ணம்.

நெ. 11. இராகம் தேசிகதோடி—தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

மணிநிகழ்கின் கிணியசைய வருகுமருள் முருகன்
வர்சாம கோசரமாய் வயங்குமருள் முருகன்

வணிவோர்கள் பிணியகற்றும் பசமகுரு முருகன்
பாலோடு நெய்கலந்த பான்மையுள்ள முருகன்

மயில்போன்ற வள்ளியணை மதிவதன முருகன்
வருந்துமென்முன் காவிவஸ்த்ர வடிவுடைய முருகன்

குயிலோசைக் குஞ்சரியாள் கொஞ்சியவேல் முருகன்
குழந்தையெற்கு அனந்தல்தனில் கோலமருள் முருகன்

குமரேசன் சுப்ரமண்யன் குகனெனும்பேர் முருகன்
கோலமயி லேறிவிளை யாடிவரு முருகன்
சுமழ்நீப மாலையணி கடவுள்திரு முருகன்
கருணையானந் தன்புகழைக் கருதுகின்ற முருகன்

நெ. 12. இராகம் ஆனந்தபைரவி—தாளம் ஆதி.

கண்ணிகள்.

(1) சிந்தா மணிரூபனே சிறு
சேயேற் கநுதாபனே
கந்தங் கமழ்நீபனே குறக்
கன்னி யணை சல்லாபனே

செந்தேன் வடிந்தோடு மலர்த்தாளா அருள்
எந்தாய்நீ வந்தாள்வ தொருநாளா
புந்தி மகிழ்ந்துங்கேளா தது
போலிருப்ப தேன் தயாளா

(2) சிந்தை யிரங்கலையா திருச்
செல்வா மனமிலையா
எந்த னிடந்தொலையா உனக்
கிதுவு மொரு மாமலையா

கந்தாநீ எந்தனைக்கை விடலாமா உனைக்
காணமற் கண்கலக்கப் படலாமா

## திருப்பா[illegible]ணி.

யந்தங் தொடவும் போ[illegible]
பால சுப்ர மண்யநாமா

(3) கண்ணின் கருமணியே தவக்
கருணையானந்தம் பூணணியே
நண்ணும் பவப்பிணியே செல
நலஞ்செய் சுப்ர மாமணியே

மண்ணோர் புகழுவருங் குமரேசா மணி
வண்ணமை நண்ணத தவர்நேசா
எண்ணு மென்னோடுபேசா தரும
ஏனோ சொல்சு யம்ப்ரகாசா

### பையல் யானேழை என்ற அலிபாதுஷா மெட்டு.

நெ. 13. இராகம் முகாரி—தாளம் ரூபகம்.

பல்லவி.

இன்னந் தயவில்லையா செய்த
தென்ன குறைசொல்லையா (உனக்கி)

அநுபல்லவி.

சின்னஞ் சிறியவர் செய்பிழை தீர்த்தருள்
செய்வதுன் பாரமன்றோ அருட்
பன்னிரு கண்க ளிருக்குநீ யென்னைக்கண்
பாராத தேதுநன்றோ (உனக்கி)

கொஞ்சுங் குறத்தியென் சஞ்சலந் தன்னைக்
குறித்துன் னிடமெடுத்து அவள்
நெஞ்ச முடன்சொல்ல வில்லையா நல்லருள்
நீசெய் எனையடுத்து (உனக்கி)

சோலை செறிந்த புலிவல மானகர்ச்
சுப்ரமண்ய தேவா (திரு
பாலன் படுந்துயர் தீரும் படிப்பரி
பாலனஞ் செய்வாவா (உனக்கி)

பூமி புகழுங் கருணையானந்தன்
புகழுக் கருள்சீலா (சிவ
காமி கொடுக்க அவுணர்கள் தம்மைச்சங்
காரஞ் செய்தவேலா (உனக்கி)

சண்முகனே சாமிமலை வாழ்குகனே என்ற மெட்டு.

செ. 14. இராகம் தேசிகதோடி—தாளம் ஆதி.

பல்லவி.

வேலவனே தவர்பணி மேலவனே
வேத விநோதனேசூர்முடி மீதினி லேவியகூர்வடி (வே)

அநுபல்லவி.

பாலன் மீதுகண் பார்முருகையா
பட்சமாய்வந் தாளுமெய்யா
சாலம் நீசெய் யாதே துய்யா

தருணந்தனில் வருவாயென
தருகேவளர் முருகாவடி (வேல)

சரணங்கள்.

சோதனையோ இதுமொரு சாதனையோ
சோபிதரூபவுல்லாசனே பாபவிமோசனயீசனே (சோ

வாது என்னிடஞ் செய்ய லாமோ
மைந்தன் தீது யாவும் போமோ
ஏதென் பால்வரக் கால்கள் நோமோ

எங்கும்பிர சங்கம்மிகு
சிங்காரனே மங்காவடி (வேல)

மாதவனே இருள்தவிர் ஆதவனே
வாகனம் நாமெனநாடிய மாமயில் மேல்விளையாடிய (மா)

காத லாகினேன் குகவி லாசா
கருணையானந்தன் மேல்விஸ் வாசா
தாதவிழ் மலர் சூடுல் லாசா

சலனங்கெட வுலகம்புகழ்
நலமின்றருள் இலகும்வடி (வே)

---

ரெ. 15. அம்பாள் மதுரைமீனாக்ஷி என்ற வண்ணம்.

கந்தா சண்முக விநோதா இன்னங்
கருணைசெய்யொண் ணுதா பொற் பாதா
கடைக்கண்பாரும் நீதா கதிவரப்ர சாதா க-க (திருக்)

வள்ளி யென்னுஞ்சிறு குட்டி இடம்
வஞ்சக மாகக் கிட்டி மருட்டி
வளையல் விற்ற செட்டி வருவதற்கேனட்டி வ-வ (திருக்)

மாசில் சிந்து தமிழ்ப்பாட கலை
மாமிதன் னுவில் நாட விசேட
மாகடீ விளையாட வல்வினைகளோட வ-வ (திருக்)

சோலைப் புனிவலநல் லூரா ஜக
சோதி மாம யூரா ஒய்யாரா
துதிப்பவர்க் குபகாரா சூரர்கள்சங் காரா சூ-சூ (திருக்)

ஐயா கருணையா னந்தம் உன
தடிமையான சொந்தம் ப்ரபந்தம்
அருவினை னனந்தம் அகற்றிடுவாய் பந்தம் அ-அ (திருக்)

நெ. 16.    இராகம் பியாக்—தாளம் ஆதி.

பல்லவி.

வாவா சண்முகா    மகிழ்வுட னெனையாள
வள்ளிகுஞ் சரியுடன் மயிலேறி    (வாவா)

சாநுபல்லவி.

தேவர்க ளிடர் தன்னைத்    தீர்த்தொளிர் வீரா
சீலமில் லாத ரண    சூரசம்மாரா
நாவலர் தவர் தொழும்    ஞானசிங் காரா
நாடரும் பரம் பொரு    ளானவொய் யாரா (வா)

உரலை படுக்கி வெண்ணெய்    திருடியே வொருகா
லுண்டு மனது களி    கொண்டவன் மருகா
உரககங் கணி பர    சிவனருள் முருகா
உனையல்லா தெவ ரையும்    உன்னிலே னருகா (வா)

ஓட மருந்தயின் று    உறங்கு பவனைப்போலே
உனைத்தொழப் பிறந்துநான்உன்னிலேன் ஒருக்காலே
தேடினுங் கொடி யவ    ரிலையிலை யெனைப்போலே
திண்புவி யதன் மேலே    தேடினே னுதலாலே (வா)

அருண கிரிக்கு முந்தி    அருள்செய்த நாதா
அர னுணர் பிரணவம்    அறைந்த விநோதா
கருணைபா னந்தன் போற்றுங்    காரண நீதா
கடிகமழ் மதுச் செழுங்    கமலபொற் பாதா (வா)

ஆண்டவா ஆடேந்திலைத்தாண்டவா என்ற வண்ணம்.

நெ. 17.    இராகம் சிந்து பைரவி—தாளம் ஆதி.

பல்லவி.

சண்முகா இன்னமென்மேற் கோபமா
சாமனமயி லேறியேவினை யாடியமுருகேசனே    சிவ

சரணுநுபல்லவி,

கண்ணிறைந்த பேரழகா விண்ணுறைந்த மாருழகா
காலன்வந்தணு காமலுன்னிரு காலிணைமிசை காதலாகினேன் (ச)

தயவினம் வரவிலேபா சாமிவழி வெகுதொலேயா
தாரணிமிசை நீயலதினி வேறிலேதுணை நாதனேசிவ (சண்)

வன்கருங்கல் நேர்நெஞ்சமோ வார்த்தைசொல வம்பஞ்சமோ
மாதவம்புரி யாதவனதி பாதகனென நீயெணிச்சிவ (சண்)

வாசாம கோசரனே மந்திர சடாட்சரனே
மணிவணனிருசெவியினிலொரு பிரணவமருள்சரவணபவ

கந்தனெனும் பேர்முருகா செந்திருவின் மாமருகா
கருணையானந்த னுருகிப்புகழுங் காரணபரி பூரணசிவ (ச)

## கந்தா பரங்கிரிவாழ் என்ற வண்ணம்.

நெ. 18. இராகம் ஆனந்தபைரவி—தாளம் ஏகம்.

ஏகபாதம்.

கொஞ்சும் வனக்குறத்தி மனமோகன-உனைத்
தஞ்சமென் றேனருள் மயில்வாகன

குரகத வனசுக சாரதமதன்மகிழ்
குயில்மொழி ரதியதி மயல்கொளு மழகொடு (கொ)

கொங்கு கசிந்த கடம்பணி யும்புய
முங்கம ழும்பத மென்று மெனக்கருள் (கொ)

குகனே யிலகுமறு முகனே வரதன் மரு
மகனே பரமருமை மகனே முகமலர்ந்து (கொ)

கோனே வுனைநினைந்து நானே பணிந்துதொழு
தேனே மவுனகதிர்ப் பானே யெனப்புகழ்ந்து (கொ)

கோலமயி லேறிவந்து பாலனென்றன் மீதுவந்து
சீலமருள் வாய்நினைந்து காலமெல்லாம் பேர்சிறந்து (கொ)

குற்றமில் நற்றமிழ் கற்றுயர் வித்துவர்
பற்றை யகற்றிய பத்தர்கள் முத்தெனக் (கொ)

குலத்தை நிலத்தை தலத்தைப் பழித்த
நலத்தர் மனத்தி லுதித்தோய் துதித்துக் (கொ)

குணநிதி யெனவரு கணபதி மகிழ்வுறு
துணைவ பசியசர வணபவ னெனமிகக் (கொ)

குருமணி யேயினது இருமருப் பதமது
கருணை யிதனிலருள் கருணையா னந்தவாழ்வே (கொ)

இசைந்தஏறுங் கரியுரி என்ற வண்ணம்.

செ. 19. **திருப்புகழ்.**

மயங்கு மாலும் பிணிவர நாடிய கசுமால்
மடந்தை மார்தம் அழிகுழி பீதினி நினையாமல்
செயங்கொ ளேமன் தொழில்கெட நேடிய சிவயோக
சிறந்த மோனந் தனையுணர் வானருள் புரிவாயே
தயங்கு மோகந் தருமிடை மாதிரு வருமாட
சதங்கை யோதங் கணகண வேயெழ நடமாடும்
வயங்கு பாதந் தரிசன மாவது மொருநாளோ
மணங்க ளாரும் புலிவல மாநகர் முருகோனே

முற்றிற்று.

[illegible]தி பிரஸ்—விஜயபுரம்-24 RPM.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும்
அவசியம் வாசிக்கவேண்டிய

# வேதாந்த பாஸ்கரன்.

இப் புத்தகத்தின் முதற்பதிப்பானது எதிர்பாராத சொற்ப காலத்திலேயே செலவாகிவிட்டபடியால் இதன் பெருமை நாம் சொல்லாமலே விளங்கும். இப்போது இரண்டாம் பதிப்பு தயாராகி வருகிறது. இது கிரௌன் 8 பேஜ் சைஸில் கண்ணைக் கவரத்தக்க பல ஆப்டோன் அப்பியாசப்படங்களுடன் மழமழப்பான வெள்ளை கிளேஸ் காகிதத்தில் முத்துப்போன்ற புதிய எழுத்துக்களால் அச்சிடப்பெற்று நூலாசிரியர் நமது ஞானபூபதி அவர்கள் திருவுருவப் படத்துடன் சீர்மை புல்காலிக்கோ பைண்டுமுதல் சாப்பர்பைண்டு வரையில் கிடைக்கும். முன்னுடியே அதிக ஆர்டர்கள் வந்திருப்பதால் அன்பர்கள் முந்திக்கொள்ளுமாறு எச்சரிக்கை செய்கிறேம்.

ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால்
இயற்றி வெளியிடப்பெற்ற

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வேதாந்த பாஸ்கரன் முதற்பதிப்பு | ... | 1—0—0 |
| யோகரகசியம் (ஒரு பாகம்) | ... ... | 0—6—0 |
| தோத்திரமஞ்சரி | ... ... ... | 0—4—0 |
| கந்தப்புகழ் | ... ... ... ... | 0—2—0 |
| திருப்பாவணி | ... ... ... ... | 0—2—0 |
| முருகப்புகழ் | ... ... ... ... | 0—2—0 |
| தெய்வப்புகழ் | ... ... ... ... | 0—2—0 |
| முருகர் தியானம் | ... ... ... | 0—1—0 |
| காவடிக்காட்சி | ... ... ... ... | 0—1—0 |
| தெட்சணாமூர்த்தி பத்திரசக்கிகம் 1-ம் பாகம் | | 0—1—0 |
| ஷை | இரண்டாம்பாகம் | 0—1—0 |
| ஷை | மூன்றும்பாகம் | 0—1—0 |

"கருணாநிதி பிரஸ்", விஜயபுரம்—திருவாரூர், S. I. Ry.